Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 1[illegible]

# ஈழநாடு

THE EELA NADU

தேசீயதினசரி National Tamil Daily

மலர் 8 (29-1-67) இதழ் 349

பராபவ ஷவ்வால் 17 தை 16 ஞாயிற்றுக்கிழமை

'ஈழநாடு' அவித்த கோலாகலமான சைக்கிள் ஓட்டப்போட்டிக் காட்சிகள்

5-ம் பக்கத்துக்குத் திருப்புங்கள்

# சுதந்திரகட்சியிலிருந்து ஆர். ஜி. விலகுவார்?

## கட்சிப் பிளவு வலுவடைகிறது

கொழும்பு, சனி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நிலவும் கருத்துவேறுபாடுகள் இப்பொழுது முற்றி 'வெடிக்கும்' நிலையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற இடைத்தேர்தல்கள் சாரணையாகவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சம்பந்தமாகவுமே இக்கருத்துவேற்றுமை நிலவுகின்றது.

சுதந்திரக்கட்சியின் உபதலைவராக திரு ஆர் ஜி சேனநாயக்கா தெரிவு செய்யப்படவேண்டுமென்று மேற்கொண்ட நடவடிக்கைகள் தோல்வியடைந்ததன் காரணமாக திரு. ஆர். ஜி. சேனநாயக்கா அதிருப்தி அடைந்துள்ளாரெனவும், பாராளுமன்றத் தொகுதிகளில் போட்டியிடுவதற்கு அபேட்சகர்கள் தெரிவிலும் மனக்கசப்பு ஏற்பட்டதாகவும் அதிலிருந்தே இக்கருத்துவேற்றுமை ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற விருந்துபசாரம் ஒன்றில் பிரதமர் திரு டட்லி சேனநாயகாவும், திரு. ஆர் ஜி. சேனநாயகாவும் ஒன்றாயிருந்து உரையாடிக் கொண்டனர் என்றும் திரு. ஆர் ஜி. சேனநாயகா மீண்டும் ஐக்கியதேசியக் கட்சியில் சேர்ந்துகொள்ளலாமென்றும் கூறப்படுகிறது.

தற்பொழுது சுதந்திரக் கட்சிக்குள் திரு. ஆர். ஜி. சேனநாயகாவிற்குஒரு குறிக்கப்பட்ட சிலரே ஆதரவு தெரிவிப்பதாகவும், மார்க்ஸியவாதிகளின் கொள்கைக்கு எதிர்ப்பு இருப்பதாகவும் தெரியவருகிறது.

## கடுமையான நடவடிக்கை

கொழும்பு, சனி

கூட்டுறவு உத்தியோகத்தர்களுக்கெதிராக செய்யப்படும் முறைப்பாடுகளை எல்லாவற்றையும் உடனடியாக கவனத்திற்கு அனுப்பி வைக்குமபடி உணவு கமத்தொழில்பகுதி நிரந்தரக் காரியதரிசி அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பிய சுற்று நிருபமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

தற்பொழுது நிரந்தர அதிகாரங்களில் ஒரு உத்தியோகத்தரின் மீது குற்றம் சுமத்தப்பட்டு நிரூபிக்கப்பட்டால் அவரை உடனடியாக வேலைநீக்கம்செய்ய அவருக்கு பூரண உரிமையுண்டு.

## போக்குவரத்து கஷ்டம்

கொத்மலை, சனி

நாவலப்பிட்டியிலிருந்து ரொஜ[illegible]மைக்கு தில்பனை வழியாகச் சென்று கொண்டிருந்த இ. போ. ச பஸ் வண்டிகள் பாதை சீர்திருத்தப்படுவதின் காரணமாக கடந்த ஒரு மாதகாலமாக நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் போக்குவரத்து செய்வதில் மிகவும் அவதிக்குள்ளாகியுள்ளார்கள்.

## விசேஷ கூட்டத்தை கூட்டுமாறு பிரதமருக்கு கோரிக்கை

கொழும்பு, சனி

ஐக்கியதேசியக் கட்சியின் பின் ஆசன பாராளுமன்ற உறுப்பினர்கள் இம் மாதம் 30-ந்திகதி ஒருகூட்டத்தை நடத்த ஒழுங்கு செய்யும்படி பிரதமரை கேட்டுள்ளனர்.

அவர்கள்பிரத்தியேகமாக பிரதமருக்கு சமர்பித்த மகஜரில் தற்பொழுது நாட்டில் நிலவிவரும் உண-உணவுப் பொருட்களின் தட்டுப்பாட்டையும், அரசாங்கஇலாகாக்களில் உத்தியோகஸ்தர்கள் செய்துவரும் வேலைகளையும் கூட்டத்தில் பரிசிலனை செய்யவேண்டுமென்று கோரியுள்ளனர்.

## பல்வைத்தியர்கள் நாளை வேலைக்குத்திரும்புவர்

கொழும்பு, சனி

வேலைநிறுத்தம் செய்துவந்த பல் வைத்தியர்கள் நாளை வேலைக்குத் திரும்புவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் கோரிக்கைகளை பரிசிலனை செய்வதற்கு மூன்றுபேர் கொண்ட ஒரு குழுவை அரசாங்கம் நியமித்துள்ளது திருவாளர்கள் எல். பி டி. சில்வா, டிக்சன் டி. சில்வா, எஸ். பி. சேனநாயகா ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

## வவுனியாவில் சுதந்திரதின ஏற்பாடுகள்

வவுனியா, சனி

வவுனியாவில் இம்முறை சுதந்திரதினக் கொண்டாட்டம் மிகவும் சிறப்பாக நடக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பாடசாலைச் சிறுவரின் அணிவகுப்பும் சைக்கிள் ஓட்டப் போட்டியும், பிற்பகல் வவுனியா அரசாங்க அதிபர் தலைமையில் வவுனியா திறந்த வெளி அரங்கில் பகிரங்கக் கூட்டமும் நடாத்த ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## 'தலைமை ஆசிரியர் தெரிவுக்கு நேர்முகபரீட்சைபொருத்தமற்றது'

### ஆசிரியர் சங்க தலைவர் கருத்து

கொழும்பு, சனி

"தலைமையாசிரியர் பதவிக்குநேர்முகப்பரீட்சைமூலம் தெரிவு நடத்துவது பொருத்தமற்றது. இந்நிலை மாற்றப்படவேண்டும். சேவைமூப்பு அடிப்படையில் அன்றேல் தகுதிகாண் பரீட்சைமூலம் தலைமையாசிரியர் பதவிக்கு நியமனங்கள் செய்யப்படவேண்டும். கல்வி இலாகா இதனைக் கருத்திற்கொண்டு செயலாற்ற வேண்டும்" என்று அகில இலங்கை கவி[illegible]க்கப்பட்ட தமிழ்ப் பாடசாலை ஆசிரியசங்கத் தலைவர் திரு எஸ். செல்லையா கொழும்புக்கிளை அலுவலகத்தில் நடைபெற்ற சங்கச் செயற்குழுக் கூட்டத்திற்கு தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். இக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆசிரியசேவையில் இருப்போருக்கு குறைந்த அளவுக்கே இடமாற்றம் பெற்று வெளிமாகாணங்களில் கடமையாற்றுவோர் விரைவில் சொந்த மாகாணங்களில் கடமையாற்றஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுமெனவும் இச்சங்கம் கல்விப் பகுதியைக் கோருகிறது.

தலைமை ஆசிரியர் பதவி நியமனம் நேர்முக பரீட்சைகளால் தெரிவு செய்யப்படாது சேவைமூப்பு அட்டவணமூலம் அல்லது தகுதிகாண் பரீட்சை மூலம் செ[illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

## 'முதலிலேயே குற்றத்தை ஒப்புக் கொண்டிருக்கலாமே'

மாவிட்டபுரம், சனி

நீர் குற்றத்தை முதலாம் தவணையில் ஒத்துக்கொண்டிருந்தால் நீர் உண்மையில் செய்தபிழையை உணர்ந்து திருந்தமுற்படுகிறாய் என்று நம்பியிருப்பேன். ஆனால் நீர் ஐந்தாம்தவணையிலேயே குற்றத்தை ஒப்புக் கொள்கிறாய். இதற்குக் காரணம் நீர் இவ்வழக்கிலிருந்து தப்பமுடியாது எனத் தெரிந்தமையேயாகும். நீர்முதல் தவணையில் குற்றத்தை ஒப்புக்கொண்டிருந்தால் நீதிமன்றம் உமக்கு வழங்கும் தண்டனையிலும் கருணைகாட்டியிருக்கும்"

மல்லாகம் நீதிபதி நேற்று திருட்டுவழக்கொன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரியைப்பார்த்து மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கில் சண்டிலிப்பாய் நிச்சாமத்தைச் சேர்ந்தசின்னப்பு சுப்பிரமணியம் என்பவர் பிரமபுரத்தைச் சேர்ந்த கந்தையா தருமலிங்கம் என்பவருக்குச் சொந்தமானதும் 10 ரூபாய் பெறுமதியுள்ளதுமான ஒரு வாழைக்குலையைத் திருடியதாகவும், களவுபோன பொருள் எனத்தெரிந்தும் வைத்திருந்ததாகவும் சண்டிலிப்பாய் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

(8-ம் பக்கம் பார்க்க)

## வானவெளிக்கப்பல் வெடித்தது

கென்னடிமுனை, ஜன. 28

அடுத்த மாதம் 21-ந்திகதி வானவெளிக்கு அனுப்பப்படவிருந்த "அப்போலோ—1" என்ற விண்வெளிக்கப்பல் நேற்று பயிற்சித் திட்டத்தின்போது திடீரெனத் தீப்பிடித்து வெடித்துச் சிதறியது

இக்கப்பலிலிருந்த மூன்று விண்வெளி வீரர்களும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சையை அமெரிக்க விஞ்ஞானிகளும் தொழில்நுட்ப வல்லுனர்களும் நேற்றிரவு நடத்தினர்

(மிகுதி 3-ம் பக்கம்)


சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு

ONE-DOLLAR


டொலர் அலுமினியம்

# 'ஈழநாடு' சைக்கிள் ஓட்டப் போட்டி காட்சிகள்

'கார்கில்ஸ்' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் ஆதரவில் கடந்த புதன்கிழமை யாழ். நகரில் கோலாகலமாக நடைபெற்ற 'ஈழநாடு' சைக்கிள் ஓட்டப்போட்டிகளின்போது எடுக்கப்பட்ட சில படங்களை இங்கு காணலாம்.




"ஈழநாடு" சைக்கிள் ஓட்டப் போட்டி-பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டியில் கலந்துகொண்ட வீரர்கள் போட்டி அதிகாரி கொடியை இறக்கியதும் முழு வீச்சில் 'விர்' என்று புறப்படும் காட்சி.




'ஈழநாடு' சைக்கிள் ஓட்டப் போட்டிக்கு சமுகமளித்திருந்த யாழ். அரசாங்க அதிபரை வரவேற்று இந்தப் போட்டிக்கு ஆதரவளித்த எல்லோருக்கும் நன்றிகூறுகிறார். 'ஈழநாடு' நிர்வாக அதிபர் திரு. மு. வயிரமுத்து




வயது வந்தோருக்கான போட்டியில் இரண்டாவது இடத்தைப்பெற்றுக்கொண்ட ஏ. எஸ். எம். ரபீக், 'குக்கரை' பரிசாகப் பெறுகிறார்.



'ஈழநாடு' சைக்கிள் ஓட்டப் போட்டியை [illegible] கணக்கானவர்களில் ஒரு பகுதியினரை இங்கு காணலாம்.



18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியில் முதற் பரிசுபெற்ற எஸ். மகேந்திரன் யாழ். அரசாங்க அதிபரிடமிருந்து பி. எஸ். ஏ. சைக்கிளை பரிசுபெறுகிறார்.



மாணவர்களுக்கான போட்டியில் முதற்பரிசு பெற்றவரான வி. நவரத்தினம் மகிழ்ச்சி பொங்க அரசாங்க அதிபரிடமிருந்து பி எஸ். ஏ. சைக்கிளை பெறுவதைக் காணலாம்.

## மாணவர் கல்வி பாதிக்கப்பட்டது

[illegible] பூநகரி, ஞாயிறு

இரணைதீவு பகுதியில் உள்ள பாடசாலையில் கடந்த சில தினங்களாக ஆசிரியர்களுக்கும் பொதுமக்களுக்குமிடையே ஏற்பட்ட பிரச்சினையால் மாணவர்களின் படிப்பு பாதிக்கப்பட்டு வருவதை இரணைதீவு மக்கள் பூநகரிப்பகுதிக் காரியாதிகாரி திரு. வி, இராசதுரைக்கு முறையிட்டனர். காரியாதிகாரி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்படி கல்வி இலாகாவுக்கும் வட்டார வித்தியாதரிசிக்கும் அறிவித்துள்ளார்.

## புராணப் படிப்பு

சுழிபுரம், சனி

பழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் கோவில் புராணப்படிப்பு நேற்றுத் தொடக்கம் ஆரம்பமாகி தொடர்ந்து எட்டுத் தினங்களுக்கு நடைபெறும். உரையாசிரியர் திரு. க. கார்த்திகேசு பயன் கூறி வருகின்றார்.

## சனசமூகநிலைய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மீசாலை தெற்கு சனசமூக நிலையத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் ஓய்வு பெற்ற கிராம சேவகர் க. சதாசிவம் தலைமையில் ஸ்ரீ கணேச வாசிகசாலை மண்டபத்தில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகள் வருமாறு.

தலைவர்: க. சதாசிவம் உப தலைவர்: இ. வீரகத்தி, செயலாளர்: [illegible], வாரித்தம்பி, உப செயலாளர்: பி. குலராசசிங்கம் பொருளாளர்: வே. கந்தையா, செயற்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் இ. க. மார்க்கண்டு, ஐ. க. நடராசா, ஆ. கோபாலமூர்த்தி, செ. இராசரத்தினம், வை. கணபதிப்பிள்ளை முதலானோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## கட்டிடம் விழுந்தது

நியூயோர்க், ஜனவரி 28

மான்ஹட்டன் நகரின் மத்தியிலுள்ள நான்குமாடிக் கட்டடம் ஒன்று சரிந்து விழுந்ததன் விளைவாக ஒருவர் இறந்தார்.

(பி.டி.ஐ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு சைக்கிள் ஓட்டப்போட்டி — ஒரு கண்ணோட்டம்:3

# ரசிகர்களைப் பெரிதும் கவர்ந்த 2-வது சைக்கிள் ஓட்டப் போட்டி

## முன்னணியில் சென்றவீரர் கடைசி நேரத்தில் விழுந்துவிட்டார்

எல்லோருடைய பார்வையும் அந்தச் சிறுவர்களின் மீது விழுந்தது! அங்கு சிறுவர்கள் விழுந்தடித்துக் கொண்டு "குளுக்கோஸ்" பாக்கெட்டுகளை வாங்கிக் கொண்டிருந்தனர். ஏராளமாக (இலவசமாக) வழங்கப்பட்ட "குளுக்கோஸ்" பாக்கெட்டுகளை நான் முந்தி நீ முந்தி என்று சிறுவர்கள் வாங்கிக் கொண்டிருந்தனர்.

— மகான் —

இதற்கிடையே நான் உங்களுக்கு ஒன்று கூட மறந்து விட்டேன். மாவையூர் எம். எம். ராஜா கோஷ்டியினர் பற்றி நான் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? அவர்கள் "ஈழநாடு" சைக்கிள் ஓட்டப் போட்டிக்கென்று விசேஷமாக படைத்திருந்த பாடலை நீங்களும் கேட்டு ரசித்திருப்பீர்கள். அவர் இயற்றிய பாடல் இதோ வருகிறது.. நீங்களும் படித்துப் பாருங்கள்.

பொன்னிலங்கை மேவிவளர்
பூத்த தமிழ் பேசும் மக்கள்
நன்முறை நடாத்தும் தினசரியே-இங்கு
நாம் படிக்கும் ஈழநாடு-இனிய
தேன் துளிக்கும் ஈழநாடு.

○

எட்டு வருடங்களாக
இங்கு பெரும் சேவை செய்தே
தொண்டவுடன் செய்தி சொல்லும்-புதினம்
தோற்றிவளர் ஈழநாடு-பணிகள்
ஆற்றிவளர் ஈழநாடு.

○

தொடக்க முதலிருந்தே
தொல்லுலகின் செய்தி எல்லாம்
சுடச்சுடத் தந்திடவும்-புதினம்
தூய தமிழ் ஈழநாடு-மலர்க்கும்
ஆய தமிழ் ஈழநாடு.

○

மன்னும் இலங்கை தன்னில்
பல பல மாகாணங்களில்
மன்னும் புதின மெல்லாம்-உடனே
வழங்கிடும் ஈழநாடு-தமிழே
முழங்கிடும் ஈழநாடு.

○

சாதி மத பேதம் எல்லாம்
தவிர்த்துத் தரணி தன்னில்
ஓதுகின்ற ஒற்றுமையை-வளர்ப்ப
தோங்கிடுதல் ஈழநாடு-புகழைத்
தாங்கிடுதல் ஈழநாடு.

●

"கார்கில்ஸ்" தாபனத்தார் தாம்
காட்டு மாதரவினால்
ஊக்கம் தரநிகழும்-சைக்கிள்
ஓட்டப் பந்தயமிதுவே-புகழை
நாட்டப் பந்தயமிதுவே.

பிற்பகல் 4-40 இருக்கும். பெரியோர்களுக்கான இரண்டாவது சைக்கிள் ஓட்டப் போட்டி ஆரம்பிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன.

இப் போட்டியில் மொத்தமாக பத்தொன்பது சைக்கிள் வீரர்கள் கலந்துகொண்டனர். ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இந்தப் போட்டி ஆரம்பத்திலிருந்தே முடிவுவரையும் மிகவும் விறுவிறுப்பாக அமைந்திருந்ததை நான் இங்கு குறிப்பிடவேண்டிய அவசியமே இல்லையெனலாம்.

நேரம் 4-50 இருக்கும். ரசிகர்களின் பெரிய ஆரவாரங்களுக்கிடையே இந்த சைக்கிள் ஓட்டப்போட்டி ஆரம்பமானது. பத்தொன்பது வீரர்களும் ஆரம்பத்திலிருந்தே உச்சநிலையில் சைக்கிள்களில் ஓடிக்கொண்டிருந்தனர்.

வழிநெடுகிலும் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்! எங்கும் குதூகலம் தாண்டவமாடியது.

முதலாவது சுற்றை இவர்கள் மூன்று நிமிடங்களுக்குக் குறைவான நேரத்தில் முடித்து ஒரு சாதனை நிலைநாட்டினர் என்றுங் கூறுங்களேன்!

வயது வந்தோர்களுக்கான போட்டியில் பல விளையாட்டுக் கழகங்களையும் சேர்ந்த சைக்கிள் வீரர்கள் கலந்துகொண்டதால் இந்த வீரர்களுக்கான ஆதரவும் அதிகரித்திருந்தது.

போட்டிவீரர்களைப்பற்றிக் குறிப்பாக சொல்வதென்றால் எஸ். மகேந்திரன், ஏ. எஸ். எம். ரபீக், கே. தயாநிதி, பீ. சிவஞானகிருஷ்ணன் ஆகியோருக்கிடையே கடுமையான போட்டி இடம் பெற்றது. ஒருவரை ஒருவர் முந்திக்கொள்வதில் இவர்கள் தங்களது முழுத் திறமையையும் பயன்படுத்திக் கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணம் கோட்டையைச் சுற்றி பத்து தடவைகள் ஓடவேண்டும் என்று இந்த வீரர்கள் கோரப்பட்டிருந்தனர். இந்தத் தூரம் உண்மையில் பத்து மைலுக்கும் சிறிது கூடுதலாகும். சைக்கிள் வீரர்களுக்கு முன்பாக பொலிஸ் மோட்டார் சைக்கிள் வந்ததுதான் தாமதம்..... எல்லோரும் தலை தெறிக்க நான்கு பக்கங்களிலும் சிதறி விடுவார்கள்.

"கமோன் அரியாலை" என்ற சத்தங்கள் எனது காதில் இன்னும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது!

சைக்கிள் ஓட்ட வீரர்கள் மும்முரமாக ஓடிக்கொண்டிருந்தனர். ஒவ்வொரு சுற்றும் மூன்று, நான்கு நிமிடங்களுக்குள் மறைந்து கொண்டிருந்தன.

போட்டி முடிவடைவதற்கு..... சைக்கிள் வீரர்கள் எல்லையைக் காண்பதற்கு இன்னும் மூன்று சுற்றுகளே பாக்கியிருந்தன. நேரம் நெருங்க... நெருங்க சைக்கிள் ஓட்ட வீரர்களும் தங்களது முழு சக்தியையும் இழந்தாலும் பரவாயில்லை என்று ஓட்டத்தில் செலவழித்துக் கொண்டிருந்தனர்.

"நான் சொன்னேன் பார்த்தாயா... 8க்குத் தான் சான்ஸ்...." என்றார் ஒரு ரசிகர்.

"எனக்கும் தெரியும். மச்சான் தொப்பி போட்ட ஆளுக்குத் தான் பீ. எஸ். ஏ. கிடைக்குமென்று ..." என்று மற்றொரு விமர்சகர்! ரசிகர்களுக்கிடையே போட்டி. இவர்களே "நீதிபதி"களாக மாறிவிட்டார்கள்! யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானம் என்ன, பல ஆண்டுகளுக்கும் பின்னர் யாழ்ப்பாணம் கோட்டையே கதிகலங்கிக்கொண்டிருந்தது! எங்கும் மக்கள் ஆரவாரம். யார் பீ. எஸ். ஏ. விருது வெல்வார் என்று அறிவதில் அவர்கள் துரத்திக்கொண்டிருந்தனர்.

ஒன்பதாவது சுற்று!— அதாவது கடைசிக்கு முந்திய சுற்று!

"டாங்... டாங்" என்று மணியடிக்கப்பட்டது. முதல் நான்கு வீரர்கள் பொலிஸ் மைதானத்தை (போட்டி ஆரம்பித்த இடத்தை) தாண்டிக்கொண்டிருந்தனர்... ரசிகர்களின் ஆரவாரம் விண்ணை முட்டிக் கொண்டிருந்தது... அப்பொழுது...

"ஐயோ அம்மாடி" என்ற பயங்கரச் சத்தம் கேட்டது! போட்டி அதிகாரிகளும் பொலிசாரும் விரைந்தனர். முன்னணியில் சென்றுகொண்டிருந்த ஒரு சைக்கிள் வீரர் அங்கு விழுந்துவிட்டார்! (தொடரும்)

## ஞானோபதேச வகுப்பு

பண்டத்தரிப்பு, சனி. யாழ். ஞானோபதேச நடுநிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட விவிலிய ஞானோபதேச வகுப்பு இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் நடைபெற்றது. சில்லாலை, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களிலுள்ள ஆசிரியர்களும் இவ்வகுப்பில் கலந்துகொண்டனர். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இவ்வகுப்புகளை ஞானோபதேச நடுநிலையத்தினர் நடாத்தி வருகின்றனர்.


உங்கள் வீட்டுக்கும் தொழிற்சாலைக்கும்

எஸ்-லோன் மழைநீர்க் குழாய்கள், கீழ்த்தரைக் குழாய்கள்

வீடுகள், தொழிற்சாலைகள் கோஸ்பிட்டல்கள் ஆகியவற்றுக்கு எஸ்-லோன் மழைநீர்க் குழாய்களும் கீழ்த்தரைக் குழாய்களும் இயற்கையாகவே தெரிவு செய்யப்படுகின்றன.


காரணம் எஸ - லோன் கறள் பிடிக்காதது, இலேசானது, வாங்கி பதிப்பதற்கு மிகவும் சிக்கனமானது

உறுதியான, நம்பிக்கையான, விலைமலிவான எஸ்-லோன் மழை நீர்க்குழாய்கள் கீழ்த்தரைக் குழாய்களை உபயோகித்து அதிக பணத்தை மிதப்படுத்துங்கள், இவற்றினுல் பிற்படும் பணம் மிதமாகும். காரணம் எஸ் - லோன் மழைநீர்க் குழாய்களும் கீழ்த் தரைக் குழாய்களும் வருடக்கணக்காக நின்றுபிடிக்க வல்லனவாகையால் பணஞ் செலவிட்டு மாற்றுக் குழாய்கள் பொருத்த வேண்டிய அவசியமேற்படாது.

எஸ்-லோனைப் பார்க்கிலும் சிறந்ததொன்றை நீங்கள் குறிப்பிட முடியாது.

எஸ்-லோன்

உற்பத்தியாளர்:
ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்.






AJNS

எஸ் - லோன் உலகமெங்கும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குத் துணை செய்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிக்கெட்

# செண்பற்றிக்ஸ் கோஷ்டியிடம் இலங்கை வங்கி தோற்றது

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் சென்-பற்றிக்ஸ் கல்லூரிக்கும், இலங்கை வங்கி கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சினேகிதபூர்வமான கிரிக்கெட்போட்டியில் சென்-பற்றிக்ஸ் கல்லூரி 267 ஓட்டங்களால் இலங்கை வங்கிக் கோஷ்டியை வெற்றியீட்டியது.

ஒருஇனிங்சுக்கான இப்போட்டியில் முதலில் சென்பற்றிக்ஸ்கல்லூரியே துடுப்பெடுத்தாடியது. இவர்கள் சகல விக்கட்டுக்களையும் இழந்து மொத்தம் 310 ஓட்டங்களைப்பெற்றனர். இதில்வீரர் சந்தியாக்கோ தனது விக்கெட்டை இழக்காமல் 108 ஓட்டங்களைப்பெற்றார். மற்றும் பெனடிக் 54 ஓட்டங்களும், பெக்மன் 63 ஓட்டங்களும், ஜெயரத்தினம் 12 ஓட்டங்களும், டுஜீல் தனது விக்கெட்டை இழக்காமல் 13 ஓட்டங்களும் பெற்றனர்.

இந்த சந்தர்ப்பத்தில் இலங்கை வங்கிக் கோஷ்டியின் வீரர்களான ஞானப்பிரகாசம் 30 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 3 விக்கட்டுக்களையும், சிவலிங்கம் 71 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கெட்டுக்களையும் முறையே வீழ்த்தினர்.

இதையடுத்து இலங்கை வங்கிக்கோஷ்டி துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுக்களையும் இழந்து மொத்தம் 43 ஓட்டங்களைப்பெற்றனர். இதில் செகராசசிங்கம் 12 ஓட்டங்களையும், குணவர்த்தனா 5 ஓட்டங்களையும், ஜோன் 5 ஓட்டங்களையும் முறையேபெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் சென்-பற்றிக்ஸ்வீரர்களான பெனடிக் 30 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 5 விக்கெட்டுக்களையும், சிவலிங்கம் ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 2 விக்கெட்டுக்களையும் முறையே வீழ்த்தினர்.

இப்போட்டி சென்பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

சங்கானை

# பட்டினசபை காரியதரிசி தற்காலிக வேலைநீக்கம்

சங்கானை, வெள்ளி

சங்கானை பட்டினசபை காரியதரிசி திரு. கே. ஈ. தியாகராசா தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். இவரைச் சங்கானை பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் நேற்று வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்கம் செய்தார். பட்டினசபைத் தலைவர் திடீர் பரிசோதனை யிட்டபோது சபைக்குரிய பணம் கையாடப்பட்டிருந்ததை கண்டு பிடித்ததாகவும் காரியதரிசியின் வேலை நீக்கத்துக்கு இதுதான் காரணம் என்றும் தெரிகிறது.

இவரது தற்காலிக வேலை நீக்கம் பற்றி உள்ளூராட்சி சேவை அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'டியூப்' உற்பத்தி

கொழும்பு, வெள்ளி

இலங்கை டயர் கூட்டுத்தாபனம் 'டியூப்'கள் உற்பத்தியை களனியில் ஆரம்பித்திருக்கின்றது.

இரண்டு கட்டங்களாக ஆரம்பிக்கப் படவிருக்கும் இந்தக் கூட்டுஸ்தாபன வேலைகளின் முதல் படியாக ஆரம்பத்தில் 250 ஆயிரம் 'டியூப்'களும் டயர்களும் தயாரிக்கப் படவிருக்கின்றன.

## இசையினால் இறைவனை அடையலாம்

காரைநகர், வெள்ளி

"இசையினால் தான் இராவணன் இறைவனின் அருளைப் பெற்றார் என்றும், பாவு, ராகம், தானம் இம்மூன்றும் இசைக்கு இன்றியமையாதன என்றும் காரைநகர் கற்பக விநாயகர் ஆலயத்தில் நடை பெற்ற செல்வன் தி. சண்முகசுந்தரம் மிருதங்க அரங்கேற்ற விழாவில் தலைமை வகித்துப் பேசிய காரைநகர் இந்துக்கல்லூரி அதிபர் திரு. ஆ. தியாகராஜா கூறினார். திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் திரு. க. முருகேசு, புலவர் செல்வி க. பூரணம், திரு. க. செல்வராஜா திரு. வைத்திலிங்கம் ஆகியோர் பாராட்டிப் பேசினார்கள். திரு. க. கணேசன் மிருதங்க வித்துவானுக்கு பொன்னாடை போர்த்து கௌரவித்துப் பாராட்டினார்.

## மாவு இல்லை

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு பலநோக்குக் கூட்டுறவுச்சமாஜத்தில் ஏற்பட்டிருக்கும் மாவு தட்டுப்பாடு காரணமாக இப்பகுதியில் மாவு கிடைக்காது மக்கள் கஷ்டமடைகின்றனர். கூப்பன் கடைகளுக்கும் இவ்வாரம் மாவு விநியோகம் செய்யப்படவில்லை.

## உணவுத்திட்டத்துக்கு ஐ. நா. உதவி

கொழும்பு, வெள்ளி

நாட்டின் உணவு உற்பத்தித் திட்டத்துக்கு ஐ. நா. உலக உணவுத்திட்டத்திலிருந்து உதவிகள் வழங்கும்படி இலங்கை கேட்டிருக்கின்றது.

இதற்கிடையில் 290 ஆயிரம் டன் மாவு பெப்ரவரி மாதத்தில் இலங்கை வந்து சேருமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## புதிய நிர்வாகிகள்

உடுவில், வெள்ளி

மன்னூர்வல்லை ஐயனார் கோவிலடி சனசமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டம் தலைவர் வே. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது. நடப்புவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர் திரு. சா. த. துரைராசா. தலைவர் திரு. வே. பொன்னம்பலம். உபதலைவர் திரு. இ. ஆனந்த நடராசா. காரியதரிசி திரு. ஆ. சிறிகுமார். உபகாரியதரிசி திரு. சிறிகுமார். தனாதிகாரி திரு. மா. நவமணிக்கம், உபதனாதிகாரி திரு. இ. இரகுநாதன். கணக்காளர் திரு. இ. விக்னேஸ்வரன்.

மற்றும் எட்டுப் பேரடங்கிய நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

# "நாடகத்தால் தமிழ் வளரும்"

கொடிகாமம், வெள்ளி

"முத்தமிழ்களில் ஒன்றான நாடகக்கலை தற்பொழுது மிகவும் கீழ்நிலை அடைந்து வருகிறது. முத்தமிழ் வளர நாடகக்கலை முக்கியமானது. நாடகக்கலை வளர்ந்தால் தமிழை எவராலும் அழிக்கமுடியாது."

இவ்வாறு திரு. கா. குமாரசாமி சென் நீக்கிலஸ் நாடகமன்றத்தாரின் 'சுமதி' நாடகம் அரங்கேற்ற விழாவின் போது கூறினார். சிறுவர் பாதுகாப்பு அதிகாரி திரு. ஏ. வி. ஏ. ஜே. வியரத்தினம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

## சுன்னாகத்தில் புதிய பஸ்நிலையம்

உடுவில், வெள்ளி

சுன்னாகம் பட்டின சபையினால் பெரியதிட்டத்தில் சுன்னாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் நவீன பஸ் நிலையத்தின் கட்டிட வேலைகள் துரிதவேகத்தில் நடைபெற்று வருகின்றது. நேற்று முன் தினம் சுன்னாகம் பட்டினசபை மண்டபத்தில் பட்டினசபைத்தலைவர் திரு. பொ. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற பட்டினசபைக் கூட்டத்தில், இந்த நவீன பஸ் நிலையத்தில் ஆறு பஸ் பிரிவுக் கட்டிடங்களை கட்டி முடிப்பதற்காக பதினோராயிரம் ரூபா மானியப் பணமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

## ஒப்படைத்தார்

கிளிநொச்சி, வெள்ளி

ஆனையிறவு கிராம சேவையாளர் திரு. கே. மகாலிங்கம் தனது குடும்பத்துக்கு சொந்தமான அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களை கிளிநொச்சிக் காரியாதிகாரி திரு. ஆர். யோகநாதனிடம் ஒப்படைத்துள்ளார்.

இதுவரையில் சுமார் 60 அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்கள் கரைச்சிக் காரியாதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டன.

## மாணவர் இரத்ததானம்

புன்னாலைக்கட்டுவன் வெள்ளி

உரும்பராய் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. வி. சுந்தரலிங்கத்தைத் தொடர்ந்து பல மாணவர்கள் இன்று இரத்ததானம் வழங்கினர். ஆசிரியைகளும், மாணவிகளும் இரத்ததானம் வழங்க சம்மதித்துள்ளனர்.

## பெற்றார் ஆசிரியர் சங்க விபரங்கள்

கல்விஅமைச்சு கோரியது

புன்னாலைக்கட்டுவன் வெள்ளி

எத்தனை பாடசாலைகளில் உண்மையாகப் பெற்றார் ஆசிரியர் சங்கங்கள் இயங்கி வருகின்றன, என்றும் அவற்றின் ஆலோசனைகள் எவ்வளவு தூரம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என்றும், அச்சங்கங்களின் வரவு செலவுக் கணக்குகள் கணக்குப் பதிவாளர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது என்றும், அவை ஏற்றுக் கொண்ட ஒப்பந்த வேலைகள் சரிவர முடிக்கப்பட்டனவா என்றும் கல்வி அமைச்சு வடபிரதேச கல்வி அதிபர் திரு. எஸ். தணிகாசலத்திடம் கோரியுள்ளது.

## மல்லாவியில் சுதந்திரதின விழா

மல்லாவி, வெள்ளி

சுதந்திரதினக் கொண்டாட்டத்தை துணுக்காய்ப் பகுதி மக்கள் சார்பக் கோசபுரம் முதலாம்பகுதி தமிழ் வித்தியாலயத்தில் கொண்டாடுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை துணுக்காய்ப் பிரிவுக் காரியாதிகாரியும், [illegible] செய்துவருகின்றார்கள்.

# இந்தியதேர்தல் அரங்கு

### ஆட்சேபம்

கேரள இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் அனிருத்திரன், திருவானந்தபுரம் மாவட்டம் சிரயன்கீழ் என்ற தொகுதியிலிருந்து டில்லி சட்டசபைக்குப் போட்டியிடுகிறார்.

"அவருடையவேட்பாளர் மனு செல்லாது" என்று சுயேட்சை வேட்பாளர் ஆட்சேபம் தெரிவித்தார்.

"அனிருத்திரன் கட்சியிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தார். எனவே, அவர் வேட்பாளராக நிற்கத் தகுதியற்றவர்" என்று சுயேச்சை வேட்பாளர் தெரிவித்தார்.

### துர்ப்பிரயோகம்

"மந்திரிகள் தங்களுடைய அதிகாரத்தைத் தேர்தலுக்குப் பயன்படுத்துகிறார்கள்" என்று தி. மு. கழகத்தைச் சேர்ந்த தலைவர் மு. கருணாநிதி குற்றம்சாட்டினார்.

"தமிழ்நாட்டில் தேர்தல் பிரசாரம்செய்யவந்த பிரதமர் இந்திராகாந்தி, அரசாங்க விமானத்தைப் பயன்படுத்தி இருக்கிறார். அதைத் திருப்பிக் கேட்டதற்குக் காமராஜர், "அதற்கான செலவை காங்கிரஸ் கட்சிகொடுத்துவிடும்" என்கிறார். நான் கேட்கிறேன்: தி. மு. கழக தலைவர் அண்ணாதுரை தேர்தல் பிரசாரம் செய்வதற்கு அதே மாதிரி விமானத்தைத் [illegible] தருவீர்களா? அதற்கு ஆகும் செலவை நாங்கள் தந்துவிடுகிறோம். கொடுக்கத் தயாரா?"

### மும்முனை போட்டி

உத்தர பிரதேச முதலமைச்சர் சுசேதா கிருபளானி கொண்டா என்ற தொகுதியிலிருந்து டில்லி சட்டசபைக்குப் போட்டியிடுகிறார். இவரை எதிர்த்து, சுதந்திராக் கட்சிவேட்பாளர் சுரேந்திரா, இந்துமகாசபை வேட்பாளர் [illegible] ஆகிய இருவரும் போட்டியிடுகின்றனர்.

### 'எனதுசாதனை!'

"என்னுடைய ஓராண்டு காலநிர்வாகத்தில், பட்டினிச்சாவு ஏற்படாத முறையில் சாதனை செய்துள்ளேன்" என்று, புனாவில் தேர்தல்பிரசாரம் செய்த பிரதமர் இந்திராகாந்தி, பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியொன்றில் கூறினார்.

### கூட்டத்தில் கூச்சல்

சுதந்திரக்கட்சி செயலாளர் எம். ஆர். மாசானி போட்டியிடும் ராஜ்கோட் தொகுதிக்குக் காமராஜர் சென்றார். அங்கே ஒரு பிரமாண்டமான கூட்டத்தில் பேசினார். அப்போது சிலர் "பசுவைப்பாதுகாப்போம்" என்று கூச்சல் போட்டார்கள். காமராஜர் அதைப் பொருட்படுத்தாது பேசிக் கொண்டேபோனார். காங்கிரஸ் ஆதரவாளர்கள் கூச்சல்போட்டவர்களைப் பிடித்து வெளியேற்றினார்கள்.

### ஆந்திராவில் காமராஜர்

காங்கிரஸ்தலைவர் காமராஜர் ஜனவரி 31ந்திகதிமுதல் ஆந்திராவில் இரண்டு நாள் தேர்தல்பிரசாரம்செய்வார். அவருடன் ஆந்திரா முதல் மந்திரி பிரமானந்தரெட்டி, ஆந்திரா காங்கிரஸ்தலைவர் திம்மாரெட்டி ஆகியோரும் செல்வார்கள்.

### இரத்த திலகம்!

சென்னை ஆயிரம்விளக்குத் தொகுதியில் போட்டியிடும் தி. மு. கழகத்தைச் சேர்ந்த தலைவர் மதியழகன், ஹரிஜனங்கள் வசிக்கும் "மக்கீஸ்" தோட்டம்பகுதியில் வாக்குவேட்டை ஆடினார். ஆதிலட்சுமி என்ற பெண் தன் கையில் கத்தியால் கிழித்து மதியழகனுக்கு இரத்தத்திலகம் வைத்து "தேர்தலில் வெற்றிபெறுவீர்கள்" என்று ஆசி கூறினார்.

### நேரடிப்போட்டி

தமிழ்நாடு சட்டசபைக்கு உள்ள 234 தொகுதிகளில் 50 தொகுதிகளில் நேரடிப் போட்டி ஏற்பட்டுள்ளது. அதில் காங்கிரசுக்கும், தி. மு. க. கழகத்துக்குமிடையே நேரடிப்போட்டி நடக்கும் தொகுதிகள் எண்ணிக்கை 39. காங்கிரசுக்கும், சுதந்திராக் கட்சிக்குமிடையே நேரடிப்போட்டி நடக்கும் தொகுதிகள் எண்ணிக்கை 9. மீதி இரண்டு இடங்களில் காங்கிரசுக்கும் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிக்கும் நேரடிப்போட்டி நடக்கிறது.

### சவுக்கால் அடியுங்கள்

"ஐந்து ஆண்டுகளுக்கு ஆட்சியை எங்களிடம் ஒப்படைக்கட்டும். அதன்பிறகு எங்கள் ஆட்சியை எடைபோடட்டும். நாங்கள்முறையானபடி ஆட்சி நடத்தவில்லையென்றால், எங்களை முச்சந்தியில் நிறுத்தி குதிரைச்சவுக்கால் அடியுங்கள் நாங்கள் வாங்கிக்கொள்ளுகிறோம்"

இவ்வாறுசென்னை ஆயிரம்விளக்குத் தொகுதி தி. மு. க. வேட்பாளர் மதியழகனை ஆதரித்து நடைபெற்ற தேர்தல்கூட்டத்தில் பேசுகையில் அண்ணாதுரை கூறினார்.

## முதலிலேயே...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்தரப்பில் வழக்கறிஞர் திரு. சி. எஸ். நாதன் ஆஜரானார். பொலிஸ் தரப்பில் சங்கானைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. மெண்டிஸ் ஆஜரானார்.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே நீதிபதி எதிரியின் கைவிரல் அடையாளங்களைப் பதியும்படியும் எதிரியை 300 ரூபாய் பிணையில் செல்லும்படியும் உத்தரவிட்டு தண்டனை வழங்குவதற்காக வழக்கை அடுத்த மாதம் 3-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## தலைமை ஆசிரிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட வேண்டிய ஒழுங்குகளை நடைமுறைக்குக் கொண்டுவருமாறு கோருவர்.

ஆசிரிய சமூகத்தினதும் கல்வித்துறையின் சேமத்தினதும், நலன்களைக் கவனிப்பதற்கு முழுநேரக்கடமையாற்றும் வகையில் ஆசிரிய தொழிற்சங்கப் பிரதிநிதி யொருவரை நியமிக்க ஆவன செய்யவேண்டும்.

இச்சங்கத்தின் மாதவெளியீடாக ஆசிரியர்களை நலன்களைப் பாதுகாக்கவும், தொழிலை வலப்படுத்தவும் உதவும் வகையில் பத்திரிகை ஒன்றை வெளியிடுவது

தேசிய உணவு அபிவிருத்தித் திட்டத்தோடு ஒத்துழைத்து ஆசிரியர்களை ஒழுங்காக விவசாயப் பண்ணைகளை அமைக்கவும், உணவு உற்பத்தியில் ஈடுபடவும் ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்வதென இச்சபை தீர்மானிக்கிறது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜனவரி 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org